# சிவ வடிவில் விஷ்ணு

லக்ஷ்மிதேவி தவம் செய்து கொண்டிருந்தபோது, அந்த தவத்திற்கு இடையூறு ஏற்படாமல் இருக்க கருடனை ஸ்ரீமகா விஷ்ணு அமர்த்துகிறார். அச்சமயம் கிருஷ்ணபரமாத்மா அங்கு வரவே, கருடன் அவரை தடுத்து நிறுத்துகிறான். கிருஷ்ணர் எப்படியும் தவத்தை காண வேண்டுமென நிர்பந்தம் செய்தார். கருடபகவான் தடுக்கவே, இருவருக்கும் யுத்தம் நேர்ந்தது. முடிவில் அயர்ந்து கிருஷ்ணர் கீழே விழுந்தார். விழுந்த இடம் தான் காரமடை.

இதற்கு வேறு காரண வரலாறும் உண்டு. பிரம்மதேவன் பூமண்டலத்தில் கிருஷ்ணரை தரிசிக்க விரும்பியதாகச் சரித்திர வரலாறு.

கிராமத்து மக்கள் காரமடையில் (கோயம்புத்தூருக்கும் மேட்டுப்பாளையத்திற்கும் நடுவில் உள்ளது) மாடுகள் மேய்ப்பது வழக்கம். பல மாடுகளில் ஏதோ ஒரு மாடு மட்டும் மடியில் பால் இல்லாமல் வரண்டு, வீடு திரும்பியது வழக்கமாக இருந்தது. பலருக்கும், ஆச்சரியத்தையும், அதிசயத்தையும் தந்தது. இந்த மாட்டின் நடவடிக்கைகளை, அதன் உரிமையாளர் ஒரு நாள் கவனித்து விட்டார்.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் இந்தப் பசு தன்மடியிலுள்ள பாலை தினமும் சுரப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தது. பசு பூர்வ ஜென்மத்தில் செய்த புண்ணியத்தின் பலனை, இந்த ஜென்மத்தில் திருப்பி பாலாகப் பொழிந்ததைக் கண்ட எஜமானர், மண் வெட்டியாலும், கோடாரியாலும், கடப்பாறையாலும், அந்த இடத்தை தோண்டினார்.

ஒரு கல்லின் மேல் பட்டு, ஒரு சில் உடைந்து ரத்தம் கசிந்ததைக் கண்டு திடுக்கிட்டார். மாடு மேய்ப்பவன் மூர்ச்சை அடைந்தான். இதைக் கண்ட மக்கள் ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்தனர். சிதிலடைந்த இந்த கல்உருவம் தான் சிவனாகவும், விஷ்ணுவாகவும் காட்சியளிக்கிறது.

இது நடந்தது துவாபரயுகம் என்று கே.வெங்கடாச்சாரி, இந்துவில் எழுதியிருக்கிறார்.

பக்தர் பிச்சு மன்றாடியார் கனவில், சந்தனம் அந்த கல்லில் சாத்தியபோது, சக்ரதாரியாக சங்குடன் காட்சியளித்தார். சிவபக்தரான அந்தபக்தர் சிவவடிவில் இருந்த இந்த சிவாபேத்ய மகா விஷ்ணுவாகத் தரிசனம் கிடைக்கப் பெற்றார் என்பதில் ஒரு வரலாறு உண்டு.

வெட்டப்பட்ட சிதிலடைந்த பாகம் இன்றைய தினம் பார்க்கலாம். இது தலையில் இடது புறத்தில் உள்ளது.

திருமலை நாயக்கர் மன்னனாக இருந்தபோது, நோய் வாய்ப்பட்டார். இந்த ஸ்தலத்திலுள்ள கார இலைகளை உண்டு. இங்கிருந்த கருட தீர்த்தத்தில் ஜெனனம்செய்தபோது நோய் நீங்கியதாக கி.பி 1639 வருட சரித்திரம் பேசுகிறது.

மூலஸ்தானத்தில் ஸ்ரீ ரங்கநாதர் கூம்புவடிசிவலிங்கமாக காட்சி அளிப்பது அதிசயம்தான். மணவாள மாமுனிவர் இந்த தலத்தைப் பற்றி பாடியுள்ளார். பஞ்சராத்ர ஆகமசாஸ்திரப் படி பூஜை நடைபெறுகிறது. தேர் உற்சவமும், ரங்கநாததிருக் கல்யாண வைபவமும், ஸ்ரீ ரங்கம், திருப்பதியில் நடப்பது போன்று நடக்கிறது என்பன அறிந்தோம்.

ரங்கநாத திருமணத்தின்போது பெத்தம்மாவை, ராமபாணமாக ஒரு சாட்டியை எடுத்துக்கொண்டு, பெத்தம்மனை மலையிலிருந்து வரவேற்கிறார். இந்த சாட்டியை பிசாசு, பைத்தியம், பயந்த கோளாறு உள்ள வர்களின் மேல் கோயில் அர்ச்சகர் வைத்தால், உடனே அந்தக் கோளாறுகள் நீங்குவதாக நம்பப்படுகிறது.

சிவனைக் காண்பவர் விஷ்ணுவையும் காணலாம். விஷ்ணுவைக் காண்பவர் சிவனையும் காணலாம். இரண்டையும் கண்டவர் எளிதில் பரமபடி காணலாம்.

தகவல்: நன்றி இந்து.

அருள்நிதி டி.வி.சீதாராமன், எஸ்.எஸ்.காலனி,

மதுரை-625 010.

Printed, Published and owned by
S.Manimaran on behalf of Jothida Boomi
and printed at Manimaran Printers,
9, Dindigul Main Road, Vilangudi,
Madurai-625 018.
Editor: C.Subramaniam.